**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09022024-8369

Volume: 9

Issue: 2

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.07.2024

Accepted: 22.07.2024

Published: 01.10.2024

Citation:
Mariselvi, V., and A. Vijayalakshmi. "Gilding Lotus in Panar's Social Tradition." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 2, 2024, pp. 78–83.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.8369

*Corresponding Author:
vmariselvi1995@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Gilding Lotus in Panar's Social Tradition

**V. Mariselvi**
*Research Scholar (Full time) Reg. No.* 22212014022007
*Post Graduate and Center for Tamil Studies*
*ABC Mahalakshmi College for Women, Thoothukudi*
*Accredited by Manonmaniam Sundaranar University Tirunelveli*
*Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0005-6432-9053*

**A. Vijayalakshmi**
***Assistant Professor,*** *Post Graduate and Center for Tamil Studies*
*ABC Mahalakshmi College for Women, Thoothukudi*

**Abstract**
*In ancient times, a nomadic community called the Panar community lived in the Tamil landscape between North-West and South-East. They are not people who live in one place but move around in search of their livelihood. Sangam literature records these people as Tolkudinars who live in search of the King and Vallals. The artistic character of these tribes was also appreciated during the formation of the state. One of the honors given by the kings and ministers to these people who lived with their art was gold Lotus. The research paper is also about its legacy.*
***Keywords:*** *Panar, Gilding Lotus, Ethnic Group, Virali, Nomadic Community*

**References**
1. Thollkappiyam, Ellampuranar Urai, Maanikkavasagar Pathippagam
2. Patthuppatu, Aaraichi Urai. Rasa Manikkanaar.
3. Patthuppatu, Nachinarkiniyanar Urai, Vu. Ve. Sa Null Nilayam

# பாண் சமூக மரபும் பொற் பூச்சூட்டலும்

***வெ. மாரிச்செல்வி***
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 22212014022007
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது
திருநெல்வேலி

***முனைவர். அ. விஜயலட்சுமி***
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி. சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

***முன்னுரை***
*பண்டைய காலத்தில் வடவேங்கடம் தென்கிழக்கிற்கு இடைப்பட்ட தமிழ் நிலப்பரப்பில் பாணர்கள் எனும் பிரிவினர் வாழ்ந்துள்ளனர். அவர்கள் ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் இடம்விட்டு இடம் நகர்தலைக் கொண்டதாக தங்களது வாழ்வினை அமைத்துக் கொண்டனர். இதனை சங்கப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. சிற்றரசர்களையும், பேரரசர்களையும் வாழ்த்திப் பாடி, ஆடி மகிழ்வித்து தமக்குத் தேவையான பொன்னும், பொருளும் பெற்றனர். பாண்மகளிர்கள், விறலியர்கள், அரசர்கள் முன்னிலையில் பாடிக் கொண்டு ஆடினர். இதனைக் கண்டு அரசர்கள் நாணயம், பொன்னாலாகிய ஆபரணங்கள், உடைகள், நாடுகள், ஊர்கள், கள் ஆகியன வழங்கிச் சிறப்பித்தனர்.*
***முக்கியச்சொற்கள்:*** *பாணர், பொற்பூச்சூட்டல், இனக்குழு, விறலி, நாடோடி சமுதாயம்*

**ஆற்றுப்படை ஒரு சமுதாய வரலாற்று விளக்கம்**

ஆற்றுப்படை என்பது பண்டைத் தமிழ் இலக்கியப் பொருள் வகைகளில் ஒன்றாகும். இது பொருளைப் பொறுத்ததாகும். பசியால் வாடுகின்ற கலைஞனைப் பசியைப் போக்குகின்ற வள்ளலிடம் போகச் சொல்லி, வழிகாட்டுவதாக, ஆற்றுப்படைப்பாடல்கள்அமையும்.அவ்வாறு வழிகாட்டுவதற்கு உரியவர் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என நால்வர் ஆவர். தொல்காப்பியத்தில்,

> **"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
> **பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறிஇச்**
> **சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"[1]**
> **- (தொல்.பொ.புற.36)**

யாருக்கு வழிகாட்டுகிறார்களோ அவர் பெயராலேயே ஆற்றுப்படை பெயர் பெறும். பாணருக்கு வழிகாட்டுவது பாணாற்றுப்படையாகும். கூத்தருக்கு வழிகாட்டுவது கூத்தராற்றுப்படையாகும். பொருநருக்கு வழிகாட்டுவது பொருநராற்றுப்படையாகும். விறலிக்கு வழிகாட்டுவது விறலியாற்றுப்படையாகும். பாணருக்குப் பாணரும், பொருநருக்குப் பொருநரும், விறலிக்கு விறலியும், கூத்தருக்குக் கூத்தரும், வழி காட்டுவது வழக்கம்.

"இவ்வாறன்றிப் புலவர் கூத்தரையோ, பாணரையோ, விறலியையோ, பொருநரையோ ஆற்றுப் படுத்துவதும் உண்டு"[2] என்பர் இராசமாணிக்கனார். *(பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக். 35-36)*. ஆற்றுப்படைக்குரிய கலைஞர்கள், வாழ்க்கை முறையிலும், தொழில் துறையிலும் சிற்சில வகைகளில் வேறுபட்டவர்கள். அவர்கள் அனைவரும், கலையைத் தொழிலாகக் கொண்டவர்கள்.

**பாணர்**

பாணர்கள் யாழிசைத்துப் பாடினர். மதிப்பு வாய்ந்த தொழில் பிரிவினர். யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப் பாணர் எனப் பிற்காலத்தில் பிரிக்கப்பட்டனர். “மண்டை என்னும் பாத்திரத்தை வைத்திருப்பவர் மண்டைப்பாணர் ஆவர்”[3] என்பர் இராசமாணிக்கனார் (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக். 42). சாதித் தோற்றக் காலத்தில் இப்பாணர் “இழிசினர்” ஆயினர். கணவன் மனைவி ஊடலைத் தீர்க்க உதவினர். பரத்தையர் தொழிலுக்கு உதவினர். பிரிந்தவரைக் கூட்டி வைப்பது அவர்களது தொழிலாகிவிட்டது.

**பொருநர்**

பொருநர் தடாரி, கிணை ஆகிய தோற்கருவிகளுடன் பாடினர். ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என அவர்கள் பலராவர். போர் செய்யாத பொருநர் என்னும் பொருளைத் தரும் “பொராப் பொருநர்” எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் போர்க்களம் சென்று வீரர்க்கு உற்சாகம் ஊட்டினர். முரசு கொட்டி வஞ்சி பாடினர். பாசறையில், காலையில் கிணை கொட்டி, மன்னரைத் துயில் எழுப்பினர்.

**கூத்தர்**

கூத்தர்கள் முழவும், பலவகை வாத்தியங்களையும் இசைத்து ஆடிப்பாடினர். இவர்களுக் குச் சாதி வரையறை இல்லை என்பார் நச்சினார்க்கினியர். இவர்கள் ஆடுநர் எனப்பட்டனர். இவர் ஆடுமிடம், ஆடுகளம் எனப்பட்டது. விழாக்களிலும், பாசறைகளிலும் இவர்களைக் காணலாம். இசைக்கருவிகளைப் பைகளில் கட்டிக் கழையில் தொங்கவிட்டுத் தோளில் சுமந்து சென்றனர்.

**விறலி**

விறலியர் என்பார் பாண்மகள் ஆவர். பாண் சமூகத்தில் பெண்டிர்கள் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல், மகடூஉ, பாண்மகள் என்பது பொதுவாக விறலியைக் குறிப்பதாகும். இவர்கள் ஆடுதல், பாடுதல், கிணை கொட்டுதல், தாளமிடல், வேடமிட்டு ஆடுதல், மெய்ப்பாடு தோன்ற நடித்தல், பாட்டியற்றிப் பாடுதல் ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்கள்.

**வாய்மொழிக் கலையின் மரபு மாற்றம்**

இனக்குழு மக்களிடையே, தொழில் பிரிவாகத் தோன்றிய இக்கலைஞர்கள் நிலப்பிரபுத்துவத் தோற்றக் காலத்தில் இனக்குழு மக்களின் தலைவர்களிடமும், புதிதாகத் தோன்றி வளர்ச்சி பெற்ற மன்னர்களிடமும் பிழைப்பு நாடிச் சென்றனர். இவர்கள் கலை ஆர்வங்கொண்டு அதனை தொழிலாக்கிக் கொண்ட, வேறு தொழில் தெரியாத, பல கலைஞர்கள். இவர்கள் நாடோடிக் கலைஞர்களும் ஆவர். வேறு தொழில் இல்லாத இவர்கள் “தங்கள் கலையை உற்பத்திச் செய்வோரிடமும், செல்வம் உடையவர்களிடமும் வெளிப்படுத்தி பரிசில் பெற்றனர். இதனையே “பரிசில் வாழ்க்கை பரிசிலர்”[4] (சிறுபாண், 218). என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. தமிழ்நாட்டில் இப்பாடல்கள் எழுந்த காலத்தில் பல்வேறு வளர்ச்சி நிலைகளில் சமுதாயங்கள் இருந்தன என்பதை இச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதன்வழி மக்களால் கலைஞர்கள் வரவேற்கப்பட்டனர் என அறிய முடிகிறது.

சீறூர் மன்னன் இனக்குழு மக்கள் தலைவன் ஆவான். அவன் தனது மக்களிடமிருந்து தம்மைப் பிரித்துக் கொள்வதில்லை. கலைஞர்களையும் பேதமின்றி ஒன்றாக உடன் அமர்த்திப் பகிர்ந்துண்டு உபசாரம் செய்வதைக் காண முடிகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவனான நள்ளி, வேட்டையாடிய விலங்கைத் தானே சமைத்துக் காட்டில் எதிர்ப்பட்ட கலைஞர்க்கு அளித்து அவர் பசியைப் போக்கியதைப் பாடல் ஒன்று கூறுகிறது. மக்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்ளாத நிலையை இது காட்டுகிறது (புறம் 150). இதுவே

"எண்பதம்"[5], அதாவது தலைவரது "எளிய தன்மை" எனப்படுகிறது. (புறம் 40, 54). அவ்வளவாகப் பின்பற்றவில்லை. "நெருங்க முடியாதபடி, ஆனால் புதிதாகத் தோன்றி வளரும் வேந்தர் அதனை சிறப்புடைய செல்வர்களாக" விளங்கினர் (புறம் 127). அவர்கள் மக்களிடமிருந்து விலகி அவர்களை விட உயர்ந்துவிட்ட நிலையினராக வாழ்ந்தனர்.

வள்ளல்கள் கலைஞரைப் போற்றினர். அவ்வள்ளல்கள் சீறூர் மன்னன், வேளிர் வேந்தன் ஆவர். இனக்குழுத் தலைவரைக் கலைஞர்கள் சீறூர் மன்னன் (புறம் 308-328), சீறூர் மதவலி (புறம் 331), சிறுகுடிக்கிழான் (புறம் 338), சீறூர் வண்மையோன் (புறம் 330), சீறூர் நெடுந்தகை (புறம் 324) என்று கூறுகின்றனர்.

கலைஞர் வளர்ந்து வரும் அரசுக்குரியவனைப் பணைகெழு வேந்தர் (புறம் 119), இருங்கடல் தானை வேந்தர் (புறம் 332), தண்பனையாளும் வேந்தர் (புறம் 322), வலம்படு தானை வேந்தர் (புறம் 324), தேர் வல்லவரோடு செல்லும் யானை வேந்தன் (புறம் 333) எனக் குறிப்பிடுகின்றனர்.

இனக்குழுச் சமுதாயத்தில் இயல்பான இசைக்கருவியாகப் பார்க்கப்பட்ட யாழ் பல உறுப்புகளைக்கொண்ட சிக்கலடைந்த கருவியாகப் பொருநராற்றுப்படையில் விவரிக்கப்படுகிறது. பொருநராற்றுப்படையில் யாழ், பத்தல், பொல்லம் பொத்திய தோல், போர்வை, ஆணி, வறுவாய், கரிய மருப்பு, வார்க்கட்டு (திவவு), நரம்பின் தொடர்ச்சி ஆகிய உறுப்புகளைக்கொண்டு காட்சியுடையதாகச் சித்திரிக்கப்படுகிறது.

## கலைஞர் மன்னன் தொடர்பு

இனக்குழுச் சமுதாயத்தில் தலைவன், கலைஞர்களுடைய ஆட்டபாட்டங்களில் தானும் கலந்துகொண்டான். முன் தேர்க்குரவை, பின் தேர்க்குரவை போன்ற வெற்றிச் சிறப்பில் கலந்து ஆடி மகிழ்ந்தான். இனக்குழுவின் உறுப்பாகவே இருந்து, குழுவின் கூட்டு ஆடல் பங்குகொண்டான். அவன் மக்களின் கூட்டமைப்பிலிருந்து இன்னும் விலகிவிடவில்லை. உயர்குடியாட்சி முன்னேறி நிலைபெறும் போது அரசனும், இளவரசனும், மக்களும் கண்டு மகிழக் கலைஞர்கள் ஆடிப்பாடும் நிலை தோன்றிற்று. ஆடல் பாடலைக் கண்டு, கேட்டு மகிழ்வதன்றி, அவ்வாடல் பாடல்களில் தாமே கலந்து கொள்வதில்லை.

அரசு என்னும் நிறுவனம், முடி, முரசு, கொடி, குடை போன்ற சின்னங்களைப் பெற்றது. படைகளை வைத்துக்கொண்டது. அவைக்களம் சான்றோர், ஐம்பெருங்குழு, எண்பேராயம் என வளர்ந்தது.

இனக்குழு முற்றிலும் அழிக்கப்பட்ட பின்னர், இனக் குழுத் தலைவர்கள் அரசர்களுக்குக் கீழ்ப்பட்ட சேனாதிபதிகள், அதிகாரிகள் ஆயினர். அப்பொழுது கலைஞர்கள், அரசனைத் தொழுது வாழும் வாழ்க்கையுடையவர் ஆயினர், இந்நிலையில் அவர்களது வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டதாயிற்று.

சங்கக் கலைஞர்களுக்கும் மன்னர்களுக்கும் உள்ள தொடர்பானது எளியவன் வலியவனை நாடிச் செல்லும் பயணமாக அமைந்தது. "பழுத்த மரத்தைப் பறவை நாடிச் செல்வதைப் போல, அரசரைக் கலைஞர் நாடிச் சென்றனர்"[6] (பொருநர், 64) சங்க காலம் ஒரு மாறுதல் நிலையைக் குறிப்பதாகும். இனக்குழு வாழ்க்கை அழிந்து நிலவுடைமையாக மலரும் காலக் கட்டத்தைக் குறிக்கின்றது. இக்காலத்தில், மருதநில வாழ்க்கை, பிற நில வாழ்க்கைகளில் எல்லாம் செழிப்புமிக்கதாயிருந்தது. இனக் குழு வாழ்க்கை அழிந்து, அரசு தோன்றியது. மக்களையும் அரசில் இணைத்துக்கொள்ளப் பல போர்கள் நிகழ்ந்தன.

## பொற்பூச் சூட்டல்

கொடுக்கும் தன்மையுடைய வள்ளல்களிடம் இசையில் வல்ல பாணர்கள் வந்து இசைப்பாடிப் பரிசு பெறுவார்கள். கூத்தர்கள் அணுகிக் கூத்தாடி மகிழ்வித்துப் பல பொருள்களைப் பெறுவார்கள். பாட்டுப் பாடியும் ஆடியும் தம்முடைய கலைத் திறமையைக் காட்டும்

பெண்களாகிய விறலியர்களும் பரிசு பெறுவதுண்டு. தடாரி எனும் பறையினை முழக்கிப் பாடிய பொருநர்களும் வேண்டிய பரிசில் பெற்றனர். அவ்வகையில் பாணர் பொற்பு பெற்றதாக இலக்கியங்கள் குறிப்பிடுகிறது. பொற் பூ - பாணர்க்கு அரசர் சூட்டும் பொன்னால் ஆன தாமரை ஆகும்.

**புறநானூற்றில் பாணர்கள்**

பாணர்கள் என்போர் தமிழ்க் குடியின் தொல் குடியினராவர். இவர்கள் பல திறப்பட்ட இனமக்களின் கூட்டுக் கலைஞர்களாவர். அவர்களைப் "பாணர், பொருநர், கூத்தர், விறலியர் கோடியர், வயிரியர் எனச் சுட்டுகின்றனர். வீரயுகக் காலத்தில் முதன்மையான கலைஞர்களாகப் பாண்மரபினரே முன் வைக்கப்பட்டனர். இப்பாணர் என்ற சொல் புறநானூற்றில் 26 இடங்களில் வருகிறது"[7] (ப.15) சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், காந்திதாசன்)

இனக்குழுச் சமுதாயத்தில் பாட்டு என்பது பாணர் குடிகளுக்கு உரியதாக இருந்தது இம்மரபு நிலவுடைமைக் காலத்திலும் தவிர்க்க இயலாததாய் தேவையான மாற்றங்களுடன் பின்பற்றப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக சங்க இலக்கிய உருவாக்கங்கள் பாணர் மரபினைத் தழுவியதாக அமைந்துள்ளன.

புராதன பாடல் வளர்ச்சியில் மூன்று கட்டங்கள் இருப்பதை அம்மன்கிளி முருகதாஸ், சங்கக் கவிதையாக்கம் - மரபும், மாற்றமும், எனும் நூலில் கூறுகிறார்.

- நேரடிப் பாத்திரங்கள் பாடியவை
- பாத்திரங்களாகப் பாணர் பாடியவை
- பாணர் போலப் புலவர் பாடியவை

சங்க காலத்தில் பாணர் பற்றிய பல்வேறு குறிப்புகள் காணப்படினும் பாணர் பாடியதாகக் எந்தப் பாடலும் காணக்கிடைக்கவில்லை. இவர்கள் தொல்காப்பியத்தில்

**"கற்பில் கூற்றுக்கூரியவர்களாகவும்"[8]**
**(தொ.491)**

**வாயில்களாகவும்"[9] (தொ.பொ.191)**

தொல்காப்பிய அகத்திணைச் சுட்டுகிறது.

இவை பாணர்களின் வாய்மொழி சார்ந்த இசைப்பாடல்கள் படிப்படியாகப் புறந்தள்ளப்பட்டு புலவர்களின் மரபானது ஏற்றம் பெறுவதைக் காட்டுகிறது. தொல்காப்பியத்தில் பண்ணத்தி என்ற இலக்கிய வகைமைக்குக் கொடுக்கப்பட்ட இடமானது மரபார்ந்த குடியினரை மறுக்க முடியாத நிலையினை வெளிப்படுத்துகிறது.

கால மாற்றத்தில் பாண் மரபானது புலவர் எனும் அமைப்பின் வளர்ச்சியில் மறைகிறது. "பாணர்களின் பாட்டு மட்டுமின்றி பாணர் குடியினரும் புறந்தள்ளப்படும் நிலையைக் காண முடிகிறது."[10] (சங்கக் கவிதையாக்கம் - மரபும் - மாற்றமும்) ப.192) பாணர்கள் குறுநில மன்னர்களைப் பாடுபவர்களாகவும், புலவர்கள் பெருநில வேந்தரோடும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். பாணர்கள் "கல்லாவாய்ப் பாணர்" என்றும் புலவர்கள் "செந்நாப்புலவர்" என்றும் போற்றப்படுகின்றனர். பரிசளிப்பு முறையிலும் பாணர் மற்றும் புலவரிடையே வேறுபாட்டு நிலையினைக் காணமுடிகிறது. இனக்குழுச் சமுதாயத்தில் பொதுமை வாழ்வில் இருந்தவர்கள் நிலவுடைமைச் சமுதாயத்தில் வறுமை வாழ்விற்குத் தள்ளப்படும் நிலையினைக் காண முடிகிறது. பாணரின் பன்முகப்பட்ட அறிவுத் திறமை மக்கள் தொடர்பும் ஆட்சி நிலையாளர்களுக்கு பயன்தரத்தக்கதாக இருந்தது. நிலவுடைமை சார்ந்த அதிகாரத் திற்கான ஏற்பு நிலையினை மக்களிடையே ஏற்படுத்தவும், மன்னர்களின் பெருமையினை, பரப்பவும் பாண்மரபினரைக் காரணமாக்கியுள்ளனர்.

**"இழைபெற்ற பாழனிக்குக்**
**குரல் புணர் சீர்க் கொளை வல் பாண் மகனும்மே**
**ஈன ஆங்கு**
**ஒள் அழல் புரிந்த தாமரை**
**வெள்ளி நாரால் புப் பெற்றிசினே"[11]**
**(புறம். 11)**

என்ற பாடலாகத் தலைவனை வாழ்த்தும் நிலையில் பாடினி பல கழஞ்சுகளால் செய்யப்பட்ட நல்ல அணிகலனைப் பெற்றாள். அவள் ஆடத்தக்க அளவினதாகிய பாடல் பாடிய பாணன் பொன்னாலாகிய தாமரைப் பூவினை வெள்ளிநாரில் தொடுத்துக் கொடுக்கப் பெற்றான். பூ என்பது குறிக்கப்படுகிறது.

தலைவனின் வீரத்தைக் கூறும் இடங்களில் பாணனுக்கு வழங்கிய பரிசிலை விறலிக்கு கொடுக்கப்பட்ட அணிகலனோடு கொடுக்கப்பட்டமை எடுத்தியம்ப வலிந்து கூறப்பட்டதாய்த் தெரிகிறது.

***"பாணர் தாமரை மலையவும், புலவர் புதலும் யானையொடு புனைதேர் பண்ணவும்"***

புலவர்களின் நிலையானது,

***"கானாது ஈத்த இப்பொருட்குயானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன்"[12]***

***(புறம்.208)***

***"நெடுங்கடை நிற்றலும் கலையே : கடும்பகல்
தேர்வீக இருக்கை ஆர நோக்கி
நீ அவற் கண்ட பின்னற புவின்
ஆடு வண்டு திமிராத் தாமரை
கடாயதாதல் அதனினும் கலையெ"[13]***

***(புறம்.69)***

இப்பாடலில் வெளியிடப்படும் "நெடுங்கடை நிற்றலும் இலையே" என்பது பாணர் சொல்லும் இடத்தில் முன்னர் காத்து நின்றதன் குறியீடு வெளிப்பாடு. மன்னனும், அவனது அரச இருக்கையும் பெருமைக்குரியது. அவனைக் கண்டால் வாடாத் தாமரைப் பூ பெறுவாய் என்கிறார்.

***"பாணன் சூடிய பசும் பொற்தாமரை
மாண் இழை விறலி மாலையொரு விளங்க
சூடும்பரி நெடுந்தேர் புட்டுவிட்டு அசை இ
ஊரீர் சோலர் சுரத்திடை இருந்தனிர்"[14]***

***(புறம். 41)***

பாணன் பசும்பொன் தாமரையும், விறலி பொன் ஆண்களோடு பரிசிலாகப் பெறத் தேரினைக் காட்டில் விட்டு இனிதிருந்தனர்.

**முடிவுரை**

இனக்குழுச் சமுதாய நிலை மாறி அரசு உருவாக்க நிலையில் கொள்வோன், கொடுப்போன் எனும் நிலைத் தோன்றுகிறது. பாணர்களுக்கு பொற்புச் சூட்டல் என்பது மன்னர்களின் வளமைக்கான குறியீடாக அமைகிறது. பாணர்கள் என்பார் வறுமை மற்றமும் இழிந்த நிலையில் உள்ளோர் என்றும் மன்னர்கள் அவர்களைக் காக்கும் புரவலர்களாகவும் கட்டமைக்கப் பெற்றுள்ளனர். சங்க காலம் வரையறைக்குட்பட்ட நிலப்பகுதிகளையும், குடியேற்றங்களையும் அதற்குரிய சொத்துரிமை, அவற்றைப் பாதுகாக்கும் வகைகளோடு உருவாக்கின என்பதைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. மன்னன், வஞ்சினத்தின் போதும் "புலவர் பாடாது ஒழிக என் நிலவரை" என்று கூறுவது புலவரின் மேன்மையினையும், பாணரது பரிசிலை, விறலி பெறும் அணிகளோடு இணைத்துக் கூறுவது அரசு உருவாக்க நிலையில் இனக்குழுச் சமூகம் பெற்றிருந்த இடத்தையும் காட்டுவதாக அமைகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, மணிவாசகர் பதிப்பகம்.
2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி உரை, இராச மாணிக்கனார்.
3. பத்துப்பாட்டு, நச்சினார்க்கினியர் உரை, உ.வே.சா நூல் நிலையம்.
4. புறநானூறு, மணிவாசகர் பதிப்பகம்.
5. சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், காந்திதாசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு
6. சங்க கவிதையாக்கம் மரபும்,மாற்றமும், அம்மன் கிளி முருகதாஸ்.